## விருத்தாசலத்தில் ஐஸ்பாக்ஸ் புதிய வகை பழம் விற்பனை

First Published : 19 Jul 2010 12:00:00 AM IST



விருத்தாசலம் பகுதியில் விற்பனை செய்யப்படும் புதிய தர்பூசணி வகை பழம்.

விருத்தாசலம், ஜூலை 18: விருத்தாசலத்தில் பஸ் நிலையம் அருகில் "ஐஸ்பாக்ஸ்' என்ற புதிய வகை பழம் விற்பனை வரத் தொடங்கி உள்ளது.

÷இதை முதலில் பார்த்த மக்கள் பப்பாளிப்பழம் எனக் கருதி விற்பனை செய்தவரிடம் சென்று கேட்டனர். அப்போது அவர் இது "ஐஸ்பாக்ஸ்' என்று தெரிவித்தார். இந்த பழம் பார்ப்பதற்கு பப்பாளிப் பழம் போன்ற தோற்றத்திலும், சுவையில் தர்ப்பூசணி பழத்தின் சுவையிலும் உள்ளது. "ஐஸ்பாக்ஸ்' என்ற இந்த பழத்தை, தர்ப்பூசணி என்று அழைப்பதாக விவசாயி தெரிவித்தார்.

÷இதுகுறித்து "ஐஸ்பாக்ஸ்' விவசாயி பிச்சைப்பிள்ளை கூறியது: பெண்ணாடத்தை அடுத்த செம்பேரி கிராமத்தில் இந்த ஐஸ்பாக்ஸ் பழத்தை 1 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்தோம். மற்ற மகசூலைக் காட்டிலும் இது எங்களுக்கு அதிக லாபம் தருவதாக உள்ளது.

÷இந்தவகை பழம் கர்நாடக மாநிலத்தில் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கடலூர் மாவட்டம் செம்பேரியிலும், விருத்தாசலத்தை அடுத்த எருமனூர் கிராமத்திலும்தான் முதல்முதலில் பயிர் செய்யப்பட்டுள்ளது.

÷தர்ப்பூசணியைப் போன்றே இதுவும் உடலுக்கு குளிர்ச்சியைத் தரக் கூடியது. இந்த வகை பயிரை தை, பங்குனி மற்றும் சித்திரை மாதங்களில் விதைக்கலாம். நாங்கள் சித்திரை  மாதத்தில் பயிர் செய்ததால் 3 மாதங்கள் ஆன நிலையில் தற்போது அறுவடை செய்து விற்பனை செய்து வருகிறோம்.

கர்நாடக மாநிலத்தில் இந்த "ஐஸ்பாக்ஸ்' பழத்துக்கு நல்ல விற்பனை உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் கடலூர் மாவட்டத்தில் முதல்முதலாக இந்தவகை பழத்தை அறிமுகம் செய்துள்ளோம். இதற்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது என்றார் அவர்.

**சாகுபடி அதிகரிப்பு தக்காளி விலை குறைய வாய்ப்பு!**

First Published : 18 Jul 2010 02:17:09 PM IST

தருமபுரி, ஜூலை 17: தருமபுரி மாவட்டத்தில் தக்காளி சாகுபடி அதிகரித்துள்ளதால், தக்காளி விலை குறைய வாய்ப்பு உள்ளது.

தக்காளியை ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். இருப்பினும், பனி மற்றும் மிதமான தட்பவெப்ப நிலையில் தக்காளி நல்ல மகசூல் தரும். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் பெய்யும் மழையால் தக்காளிச் செடி அழுகி விடும். இதனால் தக்காளி வரத்து குறையும்.

மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் அதிக வெப்பம் நிலவும் காலங்களில் பூக்கள் உதிர்ந்து விளைச்சல் குறையும்.

தற்போது, வெயில் காலம் முடிந்துள்ளது. இந்நிலையில், தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, பென்னாகரம், காரிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் 4,410 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் தக்காளி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். வழக்கத்தைவிட, இந்தாண்டு அதிக பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

தக்காளி மகசூல் அதிகரிக்க பசுமைக் குடில்களில் வளர்க்கப்படும் நாற்றுகளை விவசாயிகள் அதிக அளவில் நடவு செய்கின்றனர்.

தற்போது கடைகளில் 1 கிலோ தக்காளி ரூ. 40-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வைகாசி பட்டத்தில் புதிய தக்காளி வரத்து தொடங்கும். தக்காளி அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மரவள்ளிப் பயிர் பாதுகாப்பு: அதிகாரி விளக்கம்**

First Published : 18 Jul 2010 02:29:09 AM IST

பண்ருட்டி, ஜூலை 17: மரவள்ளிப் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து குறிஞ்சிப்பாடி தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெ.மல்லிகா விளக்கியுள்ளார்.

÷அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

÷அண்ணாகிராமம் வட்டார பகுதியில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது இதில் மாவுப்பூச்சி, வெள்ளை ஈ தாக்குதல் காரணமாக இலைகள் மஞ்சள் நிறமாகி பழுத்து காய்ந்து விடுகிறது. இது போன்ற அறிகுறி அதிக இடத்தில் தென்படுகிறது.

÷இதனைக் கட்டுப்படுத்த டிரை அசோபாஸ் (2 மிலி), பாசலோன் (2 மிலி), புரேபினோபாஸ் 50 இசி (2 மிலி), டைமெத்தோயேட் 30 இசி (2 மிலி), குளோர்பைரிபாஸ் 20 இசி (4 மிலி) (அடைப்பு குறியில் உள்ளது ஒரு லிட்டர் தண்ணீருக்கு) இதில் ஏதேனும் ஒரு மருத்துடன், வேப்ப எண்ணெய் (5 மிலி) கலந்து இலையின் அடிப்பாகம் நனையும் வரை 10 நாள்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும்.

÷மாவுப்பூச்சி மட்டும் தென்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீரில் வேப்ப எண்ணெய் 20 மிலி மற்றும் 5 மிலி சோப்பு கரைசல் கலந்து இலையின் அடிப்பாகம் நனையும்படி தெளிக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருள்கள்**

First Published : 18 Jul 2010 02:29:43 AM IST

சிதம்பரம், ஜூலை 17: விவசாயிகளுக்கு வேளாண் விரிவாக்க மையங்களில் மானிய விலையில் வழங்க வேளாண் இடுபொருள்கள் தயார் நிலையில் உள்ளது என பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் இ.தனசேகர் தெரிவித்துள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சிதம்பரம், பரங்கிப்பேட்டை, பின்னத்தூர் வேளாண் விரிவாக்க மையங்களில் பல்வேறு திட்டங்களில் மானியத்தில் ஜிப்சம் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

÷பொன்மணி, ஏ.டி.டி. 43 நெல் ரகங்களும் தற்போது இருப்பில் உள்ளது. மேலும் 0.03 சத வேப்பெண்ணெய் மருந்துக்கரைசல், பாசில்வ்ஸ், துரிஞ்சியென்ஸிஸ் உயிர் பூச்சிக்கொல்லி மருந்து, ஜிங்க் சல்பேட், தென்னை செம்பான் சிலந்தி கட்டுப்பாட்டுக்கான ஒரு சத வேம்பு மருந்து ஆகியவையும் இருப்பில் உள்ளது. மேலும் மண் வளத்தை காத்து, விளைச்சலை பெருக்கக் கூடிய உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியாவும் தேவையான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதை விவசாயிகள் பெற்று பயனடைய வேண்டும் என இ.தனசேகர் தெரிவித்துள்ளார்.

**விவசாய நெருக்கடிக்குக் காரணம் பொருளாதாரக் கொள்கைகளே!**

First Published : 18 Jul 2010 12:54:09 PM IST

Last Updated : 18 Jul 2010 01:30:26 PM IST

திருச்சி, ஜூலை 17: விவசாய நெருக்கடிக்குக் காரணம் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வரும் தவறான பொருளாதாரக் கொள்கைகள்தான் என்றார் அகில இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ். ராமச்சந்திரன் பிள்ளை.

திருச்சியில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநாட்டை சனிக்கிழமை காலை தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

"விவசாயத்தில் அரசு முதலீடுகள் குறைந்ததாலும், விவசாயக் கடன்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டதாலும், விவசாயிகள் கந்துவட்டிக்காரர்களிடம் சிக்கினர்.

இந்திய ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த முதலாளித்துவ வளர்ச்சிப்பாதையும், நவீன தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளும் இந்தளவுக்கான விவசாய நெருக்கடிக்குக் காரணம். இவையும் இந்தியாவில் தீர்மானிக்கப்படுவதில்லை. இந்திய அமெரிக்க அறிவு மையம் என்ற பெயரால் அமைக்கப்பட்ட அமைப்புதான், சில்லரை வர்த்தகத்தில் அன்னியப் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்பது உள்ளிட்ட முடிவுகளை எடுக்கிறது. இதனால் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வும் சீர்குலைகிறது.

2011-ம் ஆண்டில் புதிய வரி நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால், ரூ. 60,000 கோடி வரை வரிச்சுமை மக்கள் மீது ஏற்றப்படவுள்ளது. ஆனால் அதேநேரத்தில், பெருநிறுவனங்களுக்கான வரிியில் ரூ. 27,000 கோடி வரை சலுகைகள் அளிக்கப்படவுள்ளன.

இஸ்ரேல் உள்ளிட்ட 56 நாடுகளுடன் சுதந்திர சந்தை ஒப்பந்தத்தை மத்திய அரசு செய்துள்ளது. இந்த நாடுகள் அவர்களின் விவசாய விளை பொருள்களையும், கடல்சார் உற்பத்திப் பொருள்களையும் இந்தியச் சந்தைக்கு அனுப்பவுள்ளன.

மக்களின் பட்டினியைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 66ஆவது இடத்தில் இருக்கிறது. ஊட்டச்சத்து கிடைக்காத குழந்தைகளும், பெண்களும் அதிகமாக இருக்கும் நாடுகளின் வரிசையில் இந்தியா முன்நிற்கிறது. இதற்குக் காரணம் பொருளாதாரக் கொள்கைகள்தான்.

பொருள்களின் விலை நிலவரத்தை யூகச்சந்தைதான் கட்டுப்படுத்துவதால், எளிய மக்கள் பெரும் துயரத்துக்கு உள்ளாகிறார்கள். ஆனால், 9 பில்லியனர்களைக் கொண்டிருந்த இந்தியா இப்போது, 49 பில்லியனர்களைக் கொண்டுள்ளது. இவர்களின் சொத்து மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்து ரூ. 10.35 லட்சம் கோடியாகியிருக்கிறது.

கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் நிலம் இல்லாதவர்களாகவே உள்ளனர். விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு, விபத்து நிவாரணம் உள்ளிட்ட சட்டப் பாதுகாப்புகளுக்கும் அகில இந்திய அளவில் சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது.

நவீன பொருளாதாரக் கொள்கைகளில் இருந்து விவசாயத்தையும், விவசாயத் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் திட்டங்களை முன்வைத்தும் அவற்றை ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை.

உட்டோ ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து 15 ஆண்டுகளாவிட்ட நிலையில் அதன் மூலம் இந்தியாவுக்கு எந்தளவுக்கு பலன்கள் கிடைத்துள்ளன என்பது குறித்து மத்திய அரசு வெள்ளையறிக்கை வெளியிட வேண்டும்.

1990-ம் ஆண்டில் பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கை தொடங்கப்பட்டபோது, நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 22 சதமாக இருந்தது. ஆனால், இப்போது நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 36 சதமாக உயர்ந்திருக்கிறது.

அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் மேம்பாடுகளுக்கும் அரசு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும். ஆனால், இந்த ஆய்வுகளுக்கு தனியாரை அழைக்கிறது மத்திய அரசு. நேரடியாக அரசே முதலீடு செய்து ஆய்வுகளை மேற்கொள்ளத் தயாரில்லை.

விவசாய விளை பொருள்களுக்கு நியாயமான விலை வழங்குதல் உள்ளிட்ட பொறுப்புகளை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். சாதி, மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும்' என்றார் ராமச்சந்திரன் பிள்ளை.

**நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை: உயர்கிறது பூண்டி ஏரி நீர்மட்டம்**

First Published : 18 Jul 2010 04:08:39 AM IST

Last Updated : 18 Jul 2010 04:13:27 AM IST



திருவள்ளூர், ஜூலை 17: கடந்த சில தினங்களாக தமிழகம் மற்றும் ஆந்திர மாநில எல்லையோரம் பெய்து வரும் மழையால் கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து உள்ளது. பூண்டி ஏரிக்கு முன்பு கால்வாயில் எடுக்கப்பட்ட அளவின்படி வினாடிக்கு 315 கன அடியாக நீர்வரத்து உள்ளது. இதனால் ஏரியின் நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

÷திருவள்ளூரை அடுத்துள்ள பூண்டி ஏரியில் இருந்து சென்னை குடிநீருக்கு இணைப்பு மற்றும் மழலைக் கால்வாய் மூலம் புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளுக்கு நீர் அனுப்பப்படுகிறது. ஆண்டு தோறும் மழைக்காலத்தில் முழு அளவில் நிரம்பும் ஏரியில் இருந்து சென்னை குடிநீரின் தேவைக்கு நீர் அனுப்பப்படுவதாலும் கடுமையான கோடை வெப்பத்தாலும் ஏரியின் நீர்மட்டம் குறையும்.

÷அந்த நேரத்தில் தமிழகத்திற்கு கிருஷ்ணா கால்வாய் மூலம் ஆந்திர அரசு தண்ணீரை திறந்து விடும். கடந்த மார்ச் மாதம் பூண்டி ஏரி தனது முழு கொள்ளவான 35 அடியை எட்டியிருந்தது. கடுமையான வெப்பம் காரணமாக நீர்வரத்தும், ஏரியின் நீர் இருப்பும் குறைந்தது.

÷கடந்த வாரத்தில் 26.21 ஆக இருந்த ஏரியின் நீர்மட்டம் சனிக்கிழமை காலை நிலவரப்படி 25.32 அடியாக குறைந்தது.

÷இந்நிலையில் கடந்த சில தினங்களாக தமிழகம் மற்றும் ஆந்திர மாநில எல்லைகளில் பெய்த மழையால் கிருஷ்ணா கால்வாயில் சனிக்கிழமை காலை நிலவரப்படி வினாடிக்கு 315 கன அடி நீர் வரத்து உள்ளது.

÷பூண்டி ஏரியில் இருந்து மழலைக் கால்வாய் மூலம் சென்னை குடிநீரின் தேவைக்காக வினாடிக்கு 30 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

÷தொடர்ந்து இரு தினங்கள் மழை பெய்தால் கிருஷ்ணா கால்வாயில் நீர் வரத்து அதிகரித்து பூண்டி ஏரியில் நீர்மட்டம் கணிசமான அளவுக்கு உயரும் வாய்ப்புள்ளது என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மீன் வளர்ப்பு குறித்த மேலாண் பயிற்சி நாளை தொடக்கம்**

First Published : 18 Jul 2010 12:14:13 PM IST

புதுக்கோட்டை, ஜூலை 17: கூட்டின கெண்டை மீன் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பில் மழைக்கால மேலாண் முறைகள் குறித்த பயிற்சி முகாம் புதுக்கோட்டை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் திங்கள்கிழமை தொடங்குகிறது.

இதுகுறித்து அந்த மையத்தின் தலைவர் பி.என். ரிச்சர்டு ஜெகதீசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

""இம்மையத்தில் திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாள்கள் கூட்டின கெண்டை மீன் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பில் மழைக்கால மேலாண்மை குறித்த பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில், கெண்டைமீன் குளம் அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுத்தல், அங்கு மீன் வளர்ப்புக்கு ஏற்ற வகையில் குளத்தை உருவாக்குதல், குளத்தில் உரமிடுதல், கூட்டின கெண்டை மீன்களை இருப்பு செய்தல், மீன்களுக்கு உணவளித்தல், மீன் வளர்ப்பில் மழைக்கால மேலாண்மை முறைகள், மீன் பிடிப்பு மற்றும் விற்பனை ஆகியவை குறித்து விளக்கம் அளிக்கப்படும்.

எனவே, இப்பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் புதுக்கோட்டை அண்டக்குளம் சாலையில் மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு அருகில் இயங்கிவரும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி மையத்தில் திங்கள்கிழமை காலை 10 மணிக்கு தங்கள் பெயரைப் பதிவுசெய்துகொண்டு பயிற்சியில் சேரலாம். மேலும் விவரங்களுக்கு 04322- 271443 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் ."

**நீர்வள நிலவளத் திட்டம்: முன்பருவ முனைப்பு முகாம்**

First Published : 18 Jul 2010 11:49:25 AM IST

Last Updated : 18 Jul 2010 01:25:55 PM IST

பரமக்குடி, ஜூலை 17: ராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஒன்றியம் அரியக்குடி கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில், நீர்வள நிலவளத் திட்டம் குறித்த முன்பருவ முனைப்பு முகாம் நடைபெற்றது.

2010-11-ம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு நீர்வள நிலவளத் திட்டம் என்ற புதிய திட்டம் வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்துக்கு, போகலூர் ஒன்றியத்தில் அரியக்குடியை மாதிரி கிராமமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் நீர்வள நிலவளத் திட்டம் குறித்து, அறிமுகக் கூட்டம் மற்றும் முன்பருவ முனைப்பு முகாம், வேளாண்மை இணை இயக்குநர் சத்தியமூர்த்தி தலைமை யில் நடைபெற்றது.

இத்திட்டமானது, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடைத் துறை, நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனைத் துறை, வேளாண் பல்கலைக்கழகம், மீன்வளத் துறை ஆகிய 8 துறைகள் மூலம் செயல் படுத்தப்பட உள்ளது.

இத்திட்டங்கள் மூலம் கண்மாய்கள், கால்வாய்கள் ஆகியன மராமத்துச் செய்தல், வேளாண்மை தோட்டக்கலை பயிர்களில் வரிசை விதைப்பு முறையில் செயல் விளக்கங்கள், கால்நடைகளுக்கான தீவனப்

புல் வளர்த்தல், மீன் வளர்ப்பு ஆகியன செயல்படுத்தப்பட உள்ளன என விவசாயிகளிடம் இணை இயக்குநர் விளக்கமளித்தார்.

முன்பருவ சாகுபடி குறித்து நெல், பருத்தி, சிறுதானியப் பயிர்களுக்கு விதை நேர்த்தி முறைகளை, போகலூர் வேளாண் உதவி இயக்குநர் அரிவாசகன் விளக்கினார்.

தோட்டக்கலைத் துறைத் திட்டங்கள் குறித்து, அதன் உதவி இயக்குநர் சுரேஷ்ஜோஷியும், மண் மாதிரி குறித்து உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் கண்ணையாவும், பொட்டாஷ் விதை நேர்த்தி, உயிர் உரங்கள் விதை நேர்த்தி, நல்விதை தேர்வு போன்றவற்றை செயல் விளக்கங்களுடன், வேளாண் அலுவலர்கள் கணேசன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் செய்து காண்பித்தனர்.

முகாமில் 70-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். உதவி வேளாண் அலுவலர் பரசுராமன் நன்றி கூறினார்.

**கொப்பரை கொள்முதல் முறையை மாற்றியமைக்கக் கோரிக்கை**

First Published : 18 Jul 2010 12:18:52 PM IST

Last Updated : 18 Jul 2010 01:30:16 PM IST

பட்டுக்கோட்டை, ஜூலை 17: கொப்பரை கொள்முதல் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிராம்பட்டினத்தில் அண்மையில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெல் கொள்முதல் செய்வதில் கையாளப்படுவதைப் போல, அனுமதி அட்டையின்றி உடனடியாக பணம் பட்டுவாடா செய்து கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டும்.

தேவைக்கேற்ப கொள்முதல் மையங்களை அமைத்து, ஆண்டு முழுவதும் கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டும். தென்னை காப்பீட்டுத் தொகையாக மரத்துக்கு ரூ. 3,000 நிர்ணயம் செய்ய வேண்டும்.

காரைக்குடி- திருவாரூர் மீட்டர்கேஜ் ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்ற மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். பட்டுக்கோட்டையிலிருந்து தஞ்சை வழியாக அரியலூருக்கு அகல ரயில் பாதை அமைக்க வேண்டும்.

இலங்கை ராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம்.என்.பி. பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். கே. காளிமுத்து, ம. வேதநாயகம், எஸ்.சி. கந்தசாமி, சோ. வைரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலர் கே.கே.ஆர். லெனின் அறிக்கை வாசித்தார்.

சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் சங்கையா பங்காரி மட் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க நிர்வாகிகள் விவரம்:

கெப்ரவத் தலைவர்- அதிராம்பட்டினம் பேரூராட்சித் தலைவர் எம்.எம்.எஸ். அப்துல்வகாப், துணைத் தலைவர்- வாத்தலைக்காடு முத்து. வைரவன், துணைச் செயலர்- வழக்குரைஞர் மூத்தாக்குறிச்சி

ராஜேந்திரன், அமைப்புச் செயலர்- மகிழங்கோட்டை வை. சுப்பிரமணியன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக 17 பேரும், பொதுக் குழு உறுப்பினர்களாக 73 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், தம்பிக்கோட்டை சிவராமன், அதிராம்பட்டினம் கோடீஸ்வரன் ஆகியோர் தணிக்கைக் குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

**விவசாய நெருக்கடிக்குக் காரணம் பொருளாதாரக் கொள்கைகளே!**

First Published : 18 Jul 2010 12:54:09 PM IST

Last Updated : 18 Jul 2010 01:30:26 PM IST

திருச்சி, ஜூலை 17: விவசாய நெருக்கடிக்குக் காரணம் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வரும் தவறான பொருளாதாரக் கொள்கைகள்தான் என்றார் அகில இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ். ராமச்சந்திரன் பிள்ளை.

திருச்சியில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநாட்டை சனிக்கிழமை காலை தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

"விவசாயத்தில் அரசு முதலீடுகள் குறைந்ததாலும், விவசாயக் கடன்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டதாலும், விவசாயிகள் கந்துவட்டிக்காரர்களிடம் சிக்கினர்.

இந்திய ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த முதலாளித்துவ வளர்ச்சிப்பாதையும், நவீன தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளும் இந்தளவுக்கான விவசாய நெருக்கடிக்குக் காரணம். இவையும் இந்தியாவில் தீர்மானிக்கப்படுவதில்லை. இந்திய அமெரிக்க அறிவு மையம் என்ற பெயரால் அமைக்கப்பட்ட அமைப்புதான், சில்லரை வர்த்தகத்தில் அன்னியப் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிப்பது உள்ளிட்ட முடிவுகளை எடுக்கிறது. இதனால் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வும் சீர்குலைகிறது.

2011-ம் ஆண்டில் புதிய வரி நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனால், ரூ. 60,000 கோடி வரை வரிச்சுமை மக்கள் மீது ஏற்றப்படவுள்ளது. ஆனால் அதேநேரத்தில், பெருநிறுவனங்களுக்கான வரவியில் ரூ. 27,000 கோடி வரை சலுகைகள் அளிக்கப்படவுள்ளன.

இஸ்ரேல் உள்ளிட்ட 56 நாடுகளுடன் சுதந்திர சந்தை ஒப்பந்தத்தை மத்திய அரசு செய்துள்ளது. இந்த நாடுகள் அவர்களின் விவசாய விளை பொருள்களையும், கடல்சார் உற்பத்திப் பொருள்களையும் இந்தியச் சந்தைக்கு அனுப்பவுள்ளன.

மக்களின் பட்டினியைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 66ஆவது இடத்தில் இருக்கிறது. ஊட்டச்சத்து கிடைக்காத குழந்தைகளும், பெண்களும் அதிகமாக இருக்கும் நாடுகளின் வரிசையில் இந்தியா முன்நிற்கிறது. இதற்குக் காரணம் பொருளாதாரக் கொள்கைகள்தான்.

பொருள்களின் விலை நிலவரத்தை யூகச்சந்தைதான் கட்டுப்படுத்துவதால், எளிய மக்கள் பெரும் துயரத்துக்கு உள்ளாகிறார்கள். ஆனால், 9 பில்லியனர்களைக் கொண்டிருந்த இந்தியா இப்போது, 49 பில்லியனர்களைக் கொண்டுள்ளது. இவர்களின் சொத்து மதிப்பு மூன்று மடங்கு அதிகரித்து ரூ. 10.35 லட்சம் கோடியாகியிருக்கிறது.

கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் நிலம் இல்லாதவர்களாகவே உள்ளனர். விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு, விபத்து நிவாரணம் உள்ளிட்ட சட்டப் பாதுகாப்புகளுக்கும் அகில இந்திய அளவில் சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது.

நவீன பொருளாதாரக் கொள்கைகளில் இருந்து விவசாயத்தையும், விவசாயத் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் திட்டங்களை முன்வைத்தும் அவற்றை ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை.

உட்டோ ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து 15 ஆண்டுகளாவிட்ட நிலையில் அதன் மூலம் இந்தியாவுக்கு எந்தளவுக்கு பலன்கள் கிடைத்துள்ளன என்பது குறித்து மத்திய அரசு வெள்ளையறிக்கை வெளியிட வேண்டும்.

1990-ம் ஆண்டில் பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கை தொடங்கப்பட்டபோது, நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 22 சதமாக இருந்தது. ஆனால், இப்போது நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 36 சதமாக உயர்ந்திருக்கிறது.

அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் மேம்பாடுகளுக்கும் அரசு முதலீடுகளை அதிகரிக்க வேண்டும். ஆனால், இந்த ஆய்வுகளுக்கு தனியாரை அழைக்கிறது மத்திய அரசு. நேரடியாக அரசே முதலீடு செய்து ஆய்வுகளை மேற்கொள்ளத் தயாரில்லை.

விவசாய விளை பொருள்களுக்கு நியாயமான விலை வழங்குதல் உள்ளிட்ட பொறுப்புகளை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். சாதி, மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும்' என்றார் ராமச்சந்திரன் பிள்ளை.

**மரம் நடும் விழா**

First Published : 19 Jul 2010 09:04:30 AM IST

உத்தரமேரூர் ஜூலை 18: உத்தரமேரூர் ஒன்றியம் காவனூர்புதுச்சேரி, வாடாநல்லூர், ஊராட்சி ஒன்றிய முன்மாதிரி பள்ளிகளில் வெள்ளிக்கிழமை சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் மரம் நடும் விழா நடந்தது.
÷காஞ்சி மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் வ.தமிழரசு தலைமை தாங்கி மரக்கன்றுகளை நட்டார்.
÷உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றிய முன்மாதிரி நடுநிலைப்பள்ளியில் மகோத்சவ தினத்தை ஒட்டி சுற்றுசூழல் கருத்தரங்கம் நடந்தது. பள்ளி தலைமை ஆசிரியர் து.இரமணி, வரவேற்றார். இந்நிகழ்ச்சியிலும் பங்கேற்ற தமிழரசு, சுற்றுசூழல் மன்றம் செயல்பாடுகள் பற்றியும் காடு வளர்ப்பின் அவசியம் பற்றியும் பேசினார்.

# தினமலர்

**பயிரிடாத விவசாயிகள் மகிழ்ச்சி: பயிரிட்டவர்கள் சோகம்**

திருவள்ளூர்: திருவள்ளூரில் பெய்து வரும் பலத்த மழையால், பயிரிடாமல் விட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அறுவடைக்கு காத்திருந்த, பயிரிட்ட விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.திருவள்ளூர் மாவட்டத்தில் பேரம்பாக்கம், ஊத்துக்கோட்டை, பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில்

விவசாய நிலங்களில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் நெல் பயிரிட்ட ஏராளமான விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.
ஒரு சிலர் இருக்கும் தண்ணீரை கொண்டும், ஏரிநீரை கொண்டும் நடவு பணிகளை மேற்கொண்டனர்.இந்நிலையில் கடந்த நான்கு நாட்களாக திருவள்ளூர் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் ஏரிகளிலும், குளங்களிலும் ஓரளவு நீர் நிரம்பி உள்ளது. இதனால் நடவு பணியில் ஈடுபடாமல் இருந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முன்கூட்டியே பயிரிட்ட விவசாயிகள் தற்போது பெய்து வரும் மழையாலும், இவர்களின் விளை நிலங்களில் முற்றிய நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியதால், அறுவடை செய்ய இயலாமல் சோகத்தில் உள்ளனர்.

**ஆடி மாதம் துவங்கியதால் பழங்கள் விலை கடும் உயர்வு**

திருவள்ளூர் : ஆடி மாதம் துவங்கியதால் வாழைப்பழம் மற்றும் எலுமிச்சை விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது.வாழைப்பழம்:கடந்த சில நாட்களாக தட்ப வெப்பநிலை மாறி வருவதால் வாழை விளைச்சல் பாதிக்கப்பட்டது. வாழைப் பழங்கள் வரத்து குறைவால், விலை இரு மடங்கு உயர்ந்துள்ளது. கோயம்பேடு மார்க்கெட்டில் இருந்து தான் திருவள்ளூர் மற்றும் முக்கிய நகரங்களுக்கு வாழைப்பழங்கள் சப்ளை செய்யப்படுகின்றன.வாழை மண்டியில் மஞ்சள் வாழைப்பழம் ஒரு தாரில் 150 பழங்கள் வரை இருக்கும். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை தாரின் விலை 150 ஆக இருந்து, தற்போது 250 முதல் 270 வரை விற்கப்படுகிறது. இதனால் கடையில் ரூ.1.50க்கு விற்கப்பட்டு வந்த மஞ்சள் வாழைப்பழம் 2.50 முதல் 3 ரூபாய் வரை விற்கப்படுகிறது.எலுமிச்சைப்பழம்:ஆந்திர மாநிலத்தில் இருந்து தான் தமிழகத்தின் பெரும்பாலான இடங்களுக்கு எலுமிச்சை வரவழைக்கப்படுகிறது அங்கேயே விலை உயர்ந்துள்ளதால் ஒரு எலுமிச்சை பழத்தின் விலை இரண்டு முதல் மூன்று ரூபாய் வரை விற்கப்படுகிறது.ஒரு மூட்டையில் சிறிய, பெரிய காய்கள் வருவதால் அளவுக்கேற்றபடி இதன் விலையை வியாபாரிகள் நிர்ணயித்து கொண்டு இவ்வாறு விற்கின்றனர். தமிழகத்தில் ஆடிமாதத்தில் வாழைப்பழம் மற்றும் எலுமிச்சை பழங்களுக்கு அதிக கிராக்கி உண்டு.தட்ப வெப்ப நிலை மற்றும் வறட்சி காரணமாக விளைச்சல் குறைந்து போனதால் வாழை மற்றும் எலுமிச்சை பழங்கள் விலை கடும் விலை உயர்வை சந்தித்துள்ளது.

**வி.ஐ.டி., பல்கலை சார்பில் கால்நடை சிகிச்சை முகாம்**

வேலூர்: வேலூர் வி.ஐ.டி., பல்கலைக்கழக நிலையான ஊரக வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி கல்வி மையத்தின் அங்கமான அம்மூர் கிராம வளமையமும், தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு துறையின் ராணிப்பேட்டை கோட்டமும் சார்பில் அம்மூர் டவுன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட ரெட்டியூர், லாலிகுப்பம், அண்ணாநகர் மற்றும் எருக்கந்தொட்டி ஆகிய கிராமங்களில் இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது.டவுன் பஞ்சாயத்து தலைவர் சாந்தி புலிகேசி தலைமை வகித்தார். வார்டு உறுப்பினர்கள் சகுந்தலா முத்துசாமி,

நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வி.ஐ.டி., அம்மூர் கிராம வள மைய திட்ட இணையர் முனுசாமி வரவேற்றார்.

முகாமில் கால்நடை பராமரிப்பு துறை ராணிப்பேட்டை உதவி இயக்குனர் டாக்டர் ஜெரேம் ஜெயக்குமார் தலைமையில் உதவி மருத்துவர்கள் பாரி, விஜயகுமார், கோமதி, சுரேஷ் பாபு மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் கலந்து கொண்டு 1,500க்கும் மேற்பட்ட ஆடு, மாடு, கோழி, போன்ற கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், தடுப்பூசி, சினை பரிசோதனை மற்றும் செயற்கை கருவூட்டல் ஆகிய சிகிச்சைகள் அளித்தனர்.ஏற்பாடுகளை அம்மூர் வி.ஐ.டி., கிராம வளமைய திட்ட இணையர் முனுசாமி மற்றும் சுப்புலட்சுமி, பாபு, ராஜேஸ்கண்ணா ஆகியோர் செய்திருந்தனர்.

**தரமற்ற விதைகளை விற்றால் வேளாண் அதிகாரி எச்சரிக்கை**

சேத்தியாத்தோப்பு : காலாவதியான பூச்சி மருந்து மற்றும் தரமற்ற விதைகள் விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என வேளாண் உதவி இயக்குனர் எச்சரித்துள்ளார்.புவனகிரி வேளாண் உதவி இயக்குனர் கனகசபை, மாவட்ட விதை ஆய்வாளர் விஜயராகவன் ஆகியோர் சேத்தியாத்தோப்பு பகுதிகளில் உள்ள தனியார் பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் விதை விற்பனை கடைகளில் திடீர் ஆய்வு செய்தனர்.அப்போது நடப்பு சம்பா பருவத்திற்கு ஆதார நிலை விதைகள் மற்றும் சான்று நிலை விதைகளை மட்டுமே விற்க கடை உரிமையாளர் களுக்கு அறிவுறுத்தினர். தரமற்ற போலி விதைகள் மற்றும் காலாவதியான மருந்துகள் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தனர்.

**ஏற்காட்டில் பேரிக்காய் அறுவடை துவக்கம் விளைச்சல் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி**

சேலம்: ஏற்காட்டில் நடப்பு ஆண்டு பேரிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் தோட்டங்களை குத்தகைக்கு எடுக்க அதிக அளவில் வியாபாரிகள் குவிந்துள்ளனர்.ஏற்காட்டில் பேரிக்காய் அறுவடை துவங்கியதை அடுத்து சேலத்தில் இருந்து தினந்தோறும் ஐந்து லாரிகளில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பேரிக்காய் அனுப்பும் பணி துவங்கியுள்ளது.ஏற்காட்டில் ஆண்டு தோறும் ஜூலை முதல் வாரத்தில் பேரிக்காய் அறுவடை துவங்கி செப்டம்பர் இரண்டாவது வாரம் வரை இருக்கும். இந்த ஆண்டு பேரிக்காய் அறுவடை முதல் வாரத்தில் துவங்கிய போதும் சற்று தாமதமாகவே விற்பனைக்கு வந்து கொண்டுள்ளது.கடந்த ஆண்டு பேரிக்காய் மரங்கள் பூக்கும் தருவாயில் பெய்த ஆலங்கட்டி மழையால் பூக்கள் உதிர்ந்தது. பேரிக்காய் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. அத்துடன் மழை பெய்த போது உதிராத பூக்களால் விளைந்த காய்களின் மேல் புறத்தில் கறுப்பு நிற புள்ளிகள் காணப்பட்டது.கறுப்பு நிற காய்களை கொண்ட தோட்டங்களை குத்தகைக்கு எடுக்கு வியாபாரிகள் தயக்கம் காடடியதால் பேரிக்காய் தோட்ட உரிமையாளர்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகினர். ஆனால் இந்த ஆண்டு மழை போதிய அளவு பெய்ததால் பேரிக்காய் விளைச்சல் நன்றாக விளைந்துள்ளது.ஏற்காட்டில் பேரிக்காய் தோட்டங்களை

குத்தகைக்கு எடுக்க வியாபாரிகள் மத்தியில் பலத்த போட்டி ஏற்பட்டது. இந்த போட்டியின் காரணமாக பேரிக்காய் தோட்டத்தின் குத்தகை தொகை அதிகரித்துள்ளது, தோட்ட உரிமையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.ஏற்காட்டில் தற்போது அறுவடை செய்யப்படும் பேரிக்காய் சேலம் மொத்த பழ மண்டிக்கு கொண்டு வரப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு சென்னை, விழுப்புரம், திருநெல்வேலி, மதுரை, விருதுநகர், தர்மபுரி, ஈரோடு, கோவை என தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது.அறுவடை துவக்கத்தில் இரண்டு மினி லாரிகளில் மட்டுமே விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த பேரிக்காய். தற்போது அறுவடை உச்ச கட்டத்தில் இருப்பதால் தினசரி ஐந்து லாரிகளில் வருகிறது.தரம் பிரிக்கப்படும் பேரிக்காயின் முதல் தரம் கிலோ 15 ரூபாய்க்கும், இரண்டாவது தரம் 12 ரூபாய்க்கும், மூன்றாவது தரம் 10 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

பேரிக்காய் சீஸன் அடுத்த மாதம் வரை நீடிக்கும் என்று வியாபாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.இது குறித்து பேரிக்காய் மொத்த வியாபாரி தங்கவேலு கூறியதாவது:கடந்த ஆண்டு ஏற்காட்டில் பெய்த ஆலங்கட்டி மழையால் பேரிக்காய் விளைச்சல் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியது. அத்துடன் பேரிக்காயில் கறுப்பு புள்ளிகள், காய்கள் போதிய அளவு விளையாததால் மார்க்கெட்டில் இக்காய்களுக்கு வரவேற்பு குறைந்ததால் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டது.பேரிக்காய் தோட்டக்காரர்கள், வியாபாரிகள் மத்தியில் கடுமையான நஷ்டத்தை ஏற்படுத்தியது.  இந்த ஆண்டு பேரிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளதால் தோட்டங்களை குத்தகைக்கு எடுப்பதில் வியாபாரிகளிடையே கடுமையான போட்டி ஏற்பட்டுள்ளது.பேரிக்காய் விவசாயிகளுக்கு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தோட்டத்துக்கு நான்காயிரம் ரூபாய் முதல் எட்டாயிரம் ரூபாய் குத்தகை தொகை அதிகமாக கிடைத்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**கிராமப்புற விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் பயிற்சி**

மணப்பாறை: மணப்பாறை ரோட்டரி சங்கம் மற்றும் தேவகிருபை சமூக சேவை மையத்தின் சார்பில் கிராமப்புற விவசாயிகளுக்கான இயற்கை வேளாண் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.முகாமை ரோட்டரி சங்க தலைவர் ஐசக் துவக்கி வைத்தார்.  முன்னாள் தலைவர் பங்கிராஜ், செயலாளர் இக்னேஷியஸ் தன்ராஜ், துணைத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர். தேவகிருபை ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் வரவேற்றார். தோட்டக்கலை அலுவலர் அந்தோணி நிர்மல்ராஜ் இயற்கை விவசாயம் குறித்துப் பேசினார். "அங்கக விவசாயமும் அதன் தொழில்நுட்பங்கள்' குறித்து சரஸ்வதி வேளாண்மை தொழில்நுட்ப வல்லுநர் தனசேகர் பேசினார்.  "இயற்கை உணவும், யோகவும்' தலைப்பில், ஸ்டாலின் மான்ட்போர்ட், "முருங்கை இலை மகத்துவம்' குறித்து தரமணி ஆராய்ச்சி மைய மேலோளர் முருகேசன் பேசினர். இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகள் இடையே கலந்துரையாடல் நிகழ்ச்சியும், பயிற்சியில் பங்கேற்ற 60

விவசாயிகளுக்கும் இயற்கை உரம், மானாவாரி விதைகள் வழங்கப்பட்டது.தேவகிருபை தாமஸ்வில்லியம் நன்றி கூறினார்.

**புவி வெப்பமயமாதல் இயற்கை மாறுதல் குறித்த கருத்தரங்கம்**

திருச்சி: திருச்சியில் இந்திய குடிநீர் கழகத்தின் சார்பில், இந்திய குடிநீர் கழகத்தின் சார்பில், "புவி வெப்பமயமாதல் விளைவாக ஏற்படும் இயற்கை மாறுதல்கள்' குறித்து முன்னோடி கருத்தரங்கம் நடந்தது."இயற்கை மாறுபடுதலும், குடிநீர் மற்றும் கழிவு நீரல் அதன் தாக்கமும்' என்ற தலைப்பில் சென்னையில் 2011ம் ஆண்டு ஜனவரி 11, 12, 13 ஆகிய தேதிகளில் தேசிய கருத்தரங்கம் நடக்கவுள்ளது. இந்த கருத்தரங்குக்கு முன்னோடி அறிமுக கருத்தரங்கம் திருச்சியில்  நடத்தப்பட்டது. கருத்தரங்கில் மாநகராட்சி கமிஷனர் பால்சாமி, துணைமேயர் அன்பழகன், எம்.எல்.ஏ.,க்கள் அன்பில் பெரியசாமி, சேகரன், என்.ஐ.டி., சிவில் துறைத்தலைவர் மோசஸஸ் சாந்தகுமார், என்.ஐ.டி., பேராசிரியர்கள் நடராஜன், பழனிச்சாமி, இன்ஜினியர்கள் ரகுநாதன், பிரகாசம்,  குடிநீர் வடிகால் வாரிய முதன்மை இன்ஜினியர் சங்கர சுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் நேரு பேசியதாவது:பூமி வெப்பமயமாதலால் இயற்கை மாறுதல்கள் ஏற்பட்டு அதன் விளைவாக திருச்சி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடந்தாண்டுகளில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பொதுமக்கள் அதிகளவில் துன்புறுவதைக் நேரில் கண்டு மிகவும் வருந்தினேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்த ஏதாவது வழி கிடைக்குமா? என்று யோசித்துக் கொண்டிருந்தோம்.அந்த வேளையில், பிரச்னைக்கு தீர்வு காணும் விதமாக பல்வேறு துறைசார்ந்த இன்ஜினியர்களும், என்.ஐ.டி., பேராசிரியர்களும் ஒருங்கிணைந்து கருத்தரங்கில் ஆலோசனை நடத்துவது வரவேற்கதக்கது. பூமி வெப்பமயமாவதினால் ஏற்படும் இயற்கை மாறுதல்களை கட்டுப்படுத்த எடுத்திருக்கின்ற இந்திய குடிநீர் கழகத்தின் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.இவ்வாறு அவர் பேசினார்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அதிகாரிகள் ஆய்வுக்கூட்டம்**

ஈரோடு: ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 16 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனி அலுவலர் மற்றும் செயலாளர்களின் ஆய்வுக்கூட்டம் ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமையகத்தில் நடந்தது.தமிழ்நாடு மாநில வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி கூடுதல் பதிவாளர் தர்மலிங்கம் பேசியதாவது:ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் 16 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் பண்ணை சாராக்கடன் மற்றும் அரசு அறிவித்த சிறப்பு கடன் தீர்வு திட்டத்தில் வரவேண்டிய நிலுவைகளை வசூல் செய்திட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். 2002 முதல் 2006 வரை தொய்வுற்று இருந்த தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை

புரணமைத்து புத்துயிருட்ட தமிழக அரசின் அறிவுரைப்படி, மாநில கூட்டுறவு வங்கி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.முதல்கட்டமாக தமிழ்நாடு கூட்டுறவு வங்கி மூலம் நகைக்கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 16 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் இந்தாண்டு நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.படிப்படியாக சிறுபாசன கடன்களும் இதர கடன்களும் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வங்கி தனி அலுவலர், செயலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தனிக்கவனம் செலுத்தி செலவினத்தை குறைத்து அதிகளவு கடன்கள் வழங்கி வங்கிகளை புணரமைக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாபு, திருப்பூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராமமூர்த்தி, ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் லோகநாதன், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்ட பொது மேலாளர் ரேணுகா, ஈரோடு சரக துணைப்பதிவாளர் காந்திநாதன், கோபி சரக துணைப்பதிவாளர் சந்தானம், திருப்பூர் சரக துணைப்பதிவாளர் ரவீந்திரன், தாராபுரம் சரக துணைப்பதிவாளர் கண்ணையன், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஈரோடு மண்டல மேலாளர் செந்தில் செல்வி மற்றும் கோவை மண்டல மேலாளர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இங்கிலீஷ் காய்கறிகள் உற்பத்தி குறைந்தது விலை உயர்வால் மஞ்சள் சாகுபடி அதிகரிப்பு**

ஈரோடு:மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்ததால், தாளவாடி பகுதியில் ஆங்கில காய்கறிகள் உற்பத்தி குறைந்து, மஞ்சள் சாகுபடி அதிகரித்துள்ளது. இதையடுத்து உருளைகிழங்கு, முட்டைகோஸ் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதியான தாளவாடி பகுதியில் எப்போதும் குளிர்ந்த சீதோஷன நிலை உள்ளதால், ஆங்கில காய்கறி வகைகளான, பீட்ரூட், முட்டைகோஸ், காலிஃபிளவர், பீன்ஸ் போன்ற பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது மஞ்சளுக்கு வரலாறு காணாத வகையில் குவிண்டாலுக்கு விலை 15 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்ததால், தாளவாடி பகுதி விவசாயிகள் மஞ்சளுக்கு மாறி வருகின்றனர்.அதேபோல், சென்றாண்டு, உருளைகிழங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டு, குறைந்ததால், அதன் விலையும் உயர்ந்தது. இதனால், ஆங்கில காய்கறி வகைகளை அதிகமாக சாகுபடி செய்துவந்த, கெட்டவாடி, தலமலை, சிக்கஹள்ளி, ஈட்ட காஜானூர், தாளவாடி உள்வட்ட பகுதி விவசாயிகள் மஞ்சள் மற்றும் உருளைகிழங்கை அதிகளவு பயிரிட்டுள்ளனர். மஞ்சளுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை உள்ளதால், அதிக உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் 1,500 ஏக்கர் வரை மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது மழை பெய்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை உள்ளதால், விவசாயிகள் முட்டைகோஸ் சாகுபடி பணியை துவக்கியுள்ளனர். மஞ்சள், உருளை கிழங்கு சாகுபடிக்கு அடுத்தபடியாக முட்டைகோஸ் சாகுபடி

தீவிரமாக நடந்து வருகிறது.மலைப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:மலைப்பகுதி என்பதால், வழக்கமாக பீன்ஸ், கேரட், முட்டைக்கோஸ் போன்ற ஆங்கில காய்கறி வகைகளை அதிகளவு சாகுபடி செய்தோம். நடப்பாண்டில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்ததால், இம்முறை 1,500 ஏக்கர் வரை விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர். இதுக்கு அடுத்தபடியாக சென்றாண்டு, வடமாநிலங்களில் உருளை உற்பத்தி பாதிக்கப்பட்டதால், இங்கிருந்து உருளை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால், நடப்பாண்டில் உருளைக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்த்து சாகுபடி செய்துள்ளோம். இதுக்கு அடுத்த படியாக முட்டைகோஸ் சாகுபடி பணிகளை தொடங்கியுள்ளோம். சிக்கஹள்ளி பகுதியில் அதிகளவு விவசாயிகள் 15 நாட்களுக்கு முன்னரே முட்டைகோஸ் சாகுபடியை தொடங்கிவிட்டனர். இது தவிர பிற பகுதிகளில் ஒரு வாரத்தில் முட்டைகோஸ் சாகுபடி பணிகளை விவசாயிகள் தொடங்க உள்ளனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வெள்ளகோவில் வார சந்தையில் முருங்கை விலை விர்..ர்..ர்.**

வெள்ளகோவில்: வெள்ளகோவில் வாரச்சந்தையில் முருங்கை விலை எகிறியது. வரத்து குறைவால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை வெள்ளகோவிலில் வாரச்சந்தை நடக்கிறது.

நேற்று மர முருங்கை 25 காய் கொண்ட ஒரு கட்டு 30 ரூபாய், 25 காய் கொண்ட செடி முருங்கை 35 ரூபாய் என விற்றது. 600 காய் மரமுருங்கை கொண்ட ஒரு சாக்கு 750 ரூபாய்க்கும், 600 காய் கொண்ட செடி முருங்கை ஒரு சாக்கு விலை 850 ரூபாய்க்கும் விற்றது.நேற்று சந்தைக்கு 300 மூட்டை முருங்கை காய்கள் மட்டுமே வரத்தானது. மர முருங்கை ஒரு கிலோ 14 ரூபாய்க்கும், செடி முருங்கை ஒரு கிலோ 17 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் ஒரு கிலோவுக்கு ஐந்து ரூபாய் அதிகமாக விற்கப்பட்டது.முருங்கை வியாபாரிகள் கூறுகையில்,""ஹைதராபாத், ரெய்பூர், கொல்கத்தா, விஜயவாடா ஆகிய நகரங்களுக்கு அதிகளவில் முருங்கைக்காய் அனுப்பப்பட்டதால், நேற்று விலை உயர்வுக்கு காரணமாக இருந்தது. வெளி மாநிலங்களுக்கு அதிகளவு அனுப்பும்போது, முருங்கையின் விலை எப்போதும் உச்சத்தில் இருக்கும். சென்ற ஆண்டை விட முருங்கை வரத்து மிகவும் குறைந்து விட்டதாலும் விலை ஏறிவிட்டது,'' என, முருங்கை வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பாசிப்பயறு சாகுபடி செயல்விளக்க முகாம்**

நாமக்கல்: இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் நிதிஉதவியுடன், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், பாசிப்பயறு சாகுபடி தொழில் நுட்ப வயல்வெளி முதுநிலை செயல்விளக்கம், புதுச்சத்திரம் வட்டாரம் தாத்தையங்கார்பட்டி மற்றும் காரைக்குறிச்சியில் நடந்தது. நிகழ்ச்சியில் 15 விவசாயிகளுக்கு வம்பன்-2 விதை இடுபொருளாக வழங்கப்பட்டது. தொடர்ந்து செயல்விளக்கம் அளித்த

வேளாண்துறையினர், ""இந்த புதிய ரகம் கோ 6 மற்றும் கோ 851 ரகங்களுடன் ஒப்பீடு செய்த வகையில், மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு தன்மையுடன் செடி ஒன்றுக்கு 40 முதல் 60 வரை திரட்சியான காய்களுடன் காணப்பட்டது. மேலும், ஒரு ஏக்கரில் 350 முதல் 400 கிலோ வரை மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ""புதுச்சத்திரம் வட்டாரத்தில் கோடைமழை சீராக இருக்கும் தருணத்தில் புதிய ரக பாசிப்பயறு சாகுபடி செய்தால், 2 மாதத்தில் ஒரு ஏக்கரில் 10 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்க வாய்ப்பு உள்ளது," என்று தெரிவித்தனர்.நிகழ்ச்சியில், முன்னோடி விவசாயிகள், வேளாண் தொழில் நுட்ப  இயக்குனர் உள்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை: சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., சிவஞானம் தலைமை வகித்தார். நேர்முக உதவியாளர் (விவசாயம்) வெள் ளைச்சாமி, விவசாயத்துறை இணை இயக்குனர் ரவிகுலசேகரபாண்டியன் முன்னிலை வகித்தனர். பட்டா நிலத்தில் மண் எடுக்க அரசு அனுமதி பெறவேண்டும். இதற்கு, கனிம வளத்துறையை நாடாமல் தாசில்தாரிடம் அனுமதி பெற்று அள்ளலாம். ஆடு வளர்ப்போர் சங்கத்தில் உறுப்பினராக  உள்ளோருக்கு அடையாள அட்டை வழங்கவேண்டும். இக்கூட் டத்தில், அனைத்து துறை அலுவலர்கள் பங்கேற்று இங்கு பெறும் மனுக்களுக்கு உடனடி தீர்வு காணவேண்டும் என பேசினர்.

**கால்நடை வளர்ப்பு பயிற்சி**

கரூர்: கரூர் அடுத்த பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆ ராய்ச்சி மையம் வளாகத்தில் வரும் 23ம் தேதி "லாபகரமான செம்மறியாடு வளர்ப்பு' பயிற்சி முகாம் நடக்கிறது. ஆராய்ச்சி மைய இணை பேராசிரியர் செந்தில்வேல் வெளியிட்ட அறிக்கை:செம்மறியாடு வளர்ப்பு, கொட்டகை அமைப்பு, இனப்பெருக்க உத்திகள், நோய் மற்றும் அவற்றை தடுக்கும் முறை, விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.பங்கேற்போர் காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்துக்கு வர வேண்டும். பங்கேற்க விரும்புவோர் 04324 294335 என்ற டெலிஃபோன் எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகள் கவனத்திற்கு**

தேனி: விவசாயிகள் உரங்கள் வாங்கும் போது மூடையில் குறிப்பிடப்பட்டுள்ள உரத்தின் விலையை கொடுத்தால் போதும், அதிக பணம் கேட்டால் உடனடியாக புகார் செய்ய வேண்டும் என விவசாயத் துறை தெரிவித்துள் ளது.  தேனி விவசாய உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது; விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் உரக்கடைகளிலும் உள்ளன. ஒரே ரக உரத்திற்கு ஒவ்வொரு கம்பெனியும் ஒவ்வொரு விலை நிர்ணயம் செய் துள்ளன. இதனால்

விவசாயிகளுக்கு உர விலையில் குழப்பம் ஏற்படும். இந்த குழப்பத்தை பயன்படுத்தி வியாபாரிகள் உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய் கின்றனர். எனவே விவசாயிகள் உரம் வாங்கும் போது உர மூடையில் எவ் வளவு விலை அச்சிடப் பட்டு உள்ளதோ அதனை மட்டும் கொடுத் தால் போதும். உரம் வாங்கும் போது கட்டாயம் பில் வாங்க வேண்டும். கூடுதல் விலை கேட்டால் 04546-250506, 99945- 43645 என்ற எண்ணில் புகார் செய்யலாம் என்றார்.

**இயற்கை உரம், பூச்சி மருந்துகளிலும் போலிகள் தரக்கட்டுபாடு இல்லாததால் விவசாயிகள் பாதிப்பு**

விருதுநகர்: தமிழகத்தில் போலி இயற்கை உரம், பூச்சி மருந்துகளால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள் ளது. உரங்கள், பூச்சி மருந்துகள் விவசாயிகளை ஏமாற்றும் விதத்தில் தயாரிக்கப்பட்டு சில நிறுவனங்களால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. லாப நோக்கோடு செயல்படும் சில்லறை விற்பனை கடைகளில் தரக்கட்டுப்பாடு செய்யப்படாத இயற்கை உரம், பூச்சி மருந்துகள் விற்கப்படுகின்றன. இவற்றை பயன்படுத்தும் போது பயிர்கள் பசுமையாக தழைப்பது போல் தோன்றும். ஆனால் பயிர் பாதிக்கப்படும். இவற்றால் விவசாயிகள் பெரும் நஷ்டமடைகின்றனர். தரக்கட்டுப்பாடு: தமிழக விவசாய பல்கலையில் ஆய்வு செய்யப்பட்டு, தமிழக அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட இயற்கை உரம், பூச்சி மருந்துகள் மட்டுமே சில்லறை கடைகளில்
விற்பனை செய்ய வேண்டும். சில நிறுவனங்கள் தாங்களே ஆய்வு செய்ததாக பொய்யாக கூறி போலி மருந்துகளை தயாரித்து விற்பனைக்கு அனுப்புகின்றன. விவசாய சங்க நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: இயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள் தரக்கட்டுப்பாடு செய்யாமல் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை கடைகளில் விற்பனை செய்ய அரசு தடை விதித்தால் தான் விவசாயிகள் ஏமாற்றப்படுவதை தடுக்க முடியும். அரசு நடவடிக்கை எடுத்து தரக்கட்டுப்பாடு செய்யாத உரம். மருந்துகளை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர். விவசாயத்துறை தரக்கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் கூறியதாவது: விவசாய பல்கலை, தொழில்நுட்ப அங்கீகாரம் பெறாமல் இயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள் சில்லறை விற்பனை கடைகளில் விற்கபடுகின்றன. இவற்றை விற்கக்கூடாது என எச்சரிக்கப்பட்டுள் ளது.
இருந்தும் கிராமப்புற விவசாயிகள், போலி உரம், பூச்சி மருந்துகளால் பாதிக்கப்படுகின்றனர். போலிகளில் அமினோ ஆசிட், ஹியூமிக் ஆசிட் போன்ற வேதிப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அனைத்து உரம், பூச்சி மருந்துகள் தரக் கட்டுப்பாடு செய்யப்பட்ட பின்னரே கடைகளில் விற்பனைக்கு கொண்டு வர வேண்டும், என்றார்.

**நிலக்கடலையில் அதிக மகசூல் பெற விதை நேர்த்தி அவசியம்**

நரிக்குடி: நரிக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குனர் சக்கரவர்த்தியின் செய்திக் குறிப்பு:
சாதாரண நிலையில் நிலக்கடலையின் முளைப்புத் திறன் குறைந்த பட்சம் 70 சதவீதம் இருக்க வேண்டும்.

விதைகளைக் கடினப்படுத்தும் முறையில் விதை நேர்த்தி செய்து, விதைப்புப் பணியை மேற்கொள்ளும்போது அதிகமாக 95 சதவீதம் முளைப்புத் திறன் ஏற்பட்டு அதிக எண்ணிக்கையில் செடிகள் பராமரிக்கப்படுகின்றன. இதனால் 15 முதல் 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற முடிகிறது. விதைப்பதற்கு தேவையான கடலைப் பருப்பை ஒரு பிளாஸ்டிக் வாளியில் போடவேண்டும். விதையின் கொள்ளளவு எவ்வளவு வருகிறதோ, அதில் பாதி அளவிற்கு மட்டும் நீர் எடுத்துக் கொண்டு அதில் 0.5 சதம் அளவிற்கு கால்சியம் குளோரைடு கலந்து, அதில் விதைகளை ஆறு மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின் அவற்றை ஈரமான சாக்குத் துணியின் மீது போட்டு அதன் மீது மற்றொரு ஈரமான சாக்கால் மூடி ஒரு நாள் முழுவதும் அப்படியே வைக்க
வேண்டும். அடுத்த நாள் லேசாக முளை விட்ட விதைகளை தனியாக சேகரிக்கவேண்டும். இம்முறையை இரண்டு மணிநேரத்துக்கு ஒரு முறை, திரும்பச் செய்வதால் முளைக்கும் தன்மையுடைய விதைகளை தனியாக சேகரிக்கலாம்.விதைகளை நிழலில் உலர்த்தி விதையின் ஈரப்பதம் 10 சதத்துக்கு கொண்டு வரவேண்டும். இந்த விதைகளை ஏழு முதல் 10 நாட்கள் வரை வைத்திருந்து விதைக்கலாம். இம்முறையில் முளைப்புத்திறன் இல்லாத விதைகள் எளிதாக இனம் காணப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறது. விவசாயிகள் இந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**அணை நீர்மட்டம் உயர்வு**

அய்யம்பாளையம்: அய்யம்பாளையம் மருதாநதி அணை நீர் மட்டம் அதிகரித்தது. தாண்டிக்குடியில் பெய்த மழையால் அணைக்கு 20 கன அடி நீர் வரத்துள்ளது. அணையில் தற்போது 36 அடி நீர் உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மூன்று நாட்கள் மழை பெய்ததால் அணை நீர் மட்டம் அதிகரித்தது.

**புளியங்குடி பகுதியில் கொள்ளைபோகும் இயற்கை வளம்:அதிகாரிகள் அலட்சியத்தால் விவசாயம் கேள்விக்குறி**

புளியங்குடி:புளியங்குடி பகுதியில் கொள்ளைபோகும் இயற்கை வளங்களை அதிகாரிகள் கண்டு கொள்ளாததால் விவசாயம் கேள்விக்குறியாகி வருகிறது.புளியங்குடி நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்திருக்கின்றது. சுமார் ஒரு லட்சம் பேர் வசித்து வருகின்ற நகராட்சி அந்தஸ்து பெற்ற நகரமாகும். இங்குள்ள மக்களில் பெரும்பான்மையினர் விவசாயத்தையே தங்கள் ஜீவாதார தொழிலாக செய்து வருகின்றனர். மேலும் இங்கு மா, தென்னை, நெல்லை, எலுமிச்சை ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் எலுமிச்சை புளியங்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் இங்கு மட்டும் தான் எலுமிச்சை

பழங்களை விற்பனை செய்ய பிரத்யேகமான மார்க்கெட்டும் உள்ளது. இங்கு எண்ணிக்கையின் அடிப்படையில் ஏலம் விடப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. மேலும் இங்கு விளைகின்ற எலுமிச்சை பழங்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனால் இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலர் இதனையே ஜீவாதார தொழிலாக செய்து வருகின்றனர்.

மேலும் புளியங்குடி மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய வாலைமலையாறு மற்றும் கோட்டமலையாறு ஆகிய இரண்டு ஆறுகள் உள்ளன. இவைகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்து உற்பத்தியாகின்றன. இவற்றில் இருந்து மலைக்காலங்களில் உற்பத்தியாகி வரும் தண்ணீர் கால்வாய்கள் மூலம் குளங்கள் மற்றும் கண்மாய்களில் தேக்கி வைக்கப்படுகின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன் கிணறுகளிலும் போதிய அளவு தண்ணீர் இருந்தது. இதுபோல நம் முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த நல்ல பல திட்டங்களை எல்லாம் பலரின் சுயநலத்திற்காக சூறையாடப்பட்டுள்ளது.

அதுபோல குடியிருப்பு பகுதிகளுக்கு அருகிலேயே கண்மாய்களை ஏற்படுத்தி இருந்தனர். இது கோடைகாலத்தில் மனிதர்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்தி கொள்வதுடன் கால்நடைகள் மற்றும் பறவைகளும் தங்கள் தாகத்தை தீர்த்து வந்தன. காலப்போக்கில் இவைகள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு விவசாய நிலங்கள் கூட இன்று ரியல் எஸ்டேட் அதிபர்களின் பிடியில் சிக்கி வீட்டுமனைகளாக மாறிவிட்டன. இதனால் குளங்கள் மற்றும் கண்மாய்கள் யாவும் மிகச்சிறிய குட்டைகளாக காட்சியளிக்கின்றன. மேலும் நீர்நிலைகளை ஆக்கிரமிக்க கூடாது என்றும் அவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால் அவற்றை உடனே அகற்ற வேண்டும் என கோர்ட் உத்தரவிட்ட பின்னரும் தொடர்ந்து இதே நிலையில்தான் உள்ளது.

இதன் விளைவு தற்போது நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்துவருகின்றது. மேலும் புளியங்குடி மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்து வந்த ஆற்றுப்படுகைகள் மற்றும் அதன் கால்வாய் பகுதிகளில் இருந்தும் தினமும் பதிவு எண்கள் இல்லாத டிராக்டர்கள் மற்றும் மாட்டு வண்டிகள் மூலம் மணலும், கண்மாய்கள் மற்றும் குளங்களில் இருந்து செங்கல் சூளைக்காக மண்ணும் கடத்தப்படுகின்றன. இதனை அதிகாரிகள் கண்டுகொள்வது கிடையாது.

இதன் விளைவு புளியங்குடி பகுதியில் உள்ள விவசாய பம்புசெட் கிணறுகளில் தண்ணீர் இன்றி இப்பகுதியில் பல ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த தென்னை மரங்களை வெட்டி சொற்ப விலைக்கு விவசாயிகள் விற்றனர். அதுபோல தற்போது தண்ணீரின்றி எலுமிச்சை மரங்களும் காய்களுடன் உயிர் நீத்து வருகின்றன. மேலும் சுமார் ஒரு கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வாலைமலையாற்றுக்கு செல்ல பெரும் பாதையை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதுபோல வாலைமலை ஆற்றின் குறுக்கே புதியதாக அணை ஒன்று கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டு ஆவணங்கள் யாவும் முதல்வரின் பார்வைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து மேற்கு பகுதி விவசாய சங்க தலைவர் யூனுஸ் கூறியதாவது:-ஏற்கனவே கடந்த 2007ம் ஆண்டு ஏற்பட்ட சூறைக்காற்றில் சேதமடைந்த விவசாயிகளுக்கு இன்னும் இழப்பீட்டு தொகை வழங்கப்படவில்லை. தற்போதுதான் அதிலிரந்து சிறிது சிறிதாக மீண்டு வந்தோம். அதற்குள் போதிய பருவமழை இல்லாததாலும், ஆற்றுப்படுகைகளில் இருந்து மணல் திருடப்படுவதாகலும் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து நாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களை கூட காப்பாற்ற தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகின்றோம்.மேலும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் தோண்டவும் வங்கிகள் மூலம் கடனுதவி செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதுவம் காலப்போக்கில் கைவிடப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றும் எந்த பலனும் இல்லை. மேலும் பிள்ளையைப் போல வளர்த்து வந்த தென்னைகளை தண்ணீர் பற்றாக்குறாலும், விலை வீழ்ச்சியாலும் வெட்டி விற்றோம். அதுபோல தற்போது எலுமிச்சை மரங்களும் தற்போது போதிய தண்ணீர் இல்லாததால் சிறிது சிறிதாக உயிர்நீக்கும் நிலையில் உள்ளன.தொடர்ந்து இதே நிலை நீடித்தால் விவசாயிகளின் நிலை என்னவாகும் என்பதும் மாற்றுத் தொழில் ஏதும் இல்லாமலும், வாடும் மரங்களை கண்ணீர் சிந்தி பார்த்துவருகின்றனர் என வேதனையுடன் தெரிவித்தார்

**விவசாயிகள் சங்க துவக்க விழா**

புளியங்குடி:புளியங்குடியில் மேலப்புளியங்குடி விவசாயிகள் சங்க துவக்க விழா நடந்தது.விழாவிற்கு சங்க தலைவர் நரசிங்கபெருமாள் தலைமை வகித்தார். நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுப்பிரமணியன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் பாலசுப்பிரமணியன், நகராட்சி துணை தலைவர் முகம்மது இஸ்மாயில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க துணை தலைவர் அகமது வரவேற்றார்.வேளாண்மை துணை இயக்குனர்கள் தேவசகாயம், துரைப்பாண்டியன், தோட்டக்கலை உதவி இயக்குனர் பெருமாள், ராமசாமி, ராமச்சந்திரன், விவசாய சங்க பொருளாளர் கோபாலகிருஷ்ணன், இணை செயலாளர் சூரியன், அப்துல்வகாப் ஆகியோர் வாழ்த்தி பேசினர். விழாவில் நகர இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செயலாளர் அப்துல்ரஹீம், லியாகத்அலி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.மேலப்புளியங்குடி விவசாயிகள் சங்க செயலாளர் அப்துல்வகாப் நன்றி கூறினார்.

**வாழையில் வாடல் நோய் தடுக்கவேளாண் அதிகாரி ஆலோசனை**

வள்ளியூர்:வள்ளியூர் பகுதியில் வாழையில் வாடல் நோயை தடுக்கும் முறை குறித்து வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார்.வள்ளியூர் வட்டாரத்தில் வாழை அதிக அளவில் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் தற்போது 4-5 மாதத்தில் உள்ள வாழை கன்றுகளில் வாடல்நோய் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அறிகுறிகள்:பொதுவாக வாழையை நடவு செய்த 4-5 மாதத்தில் நோய் தோன்றும். அடி இலைகள் மஞ்சள், பழுப்பு நிறமாகி காய்ந்து மங்கிவிடும். உச்சியிலுள்ள 2-3 இலைகள் தவிர பிற இலைகள் கருகிவிடும். மட்டைகள் தொங்குவதால் மரம் பாவாடை அனிந்தது போல் தோன்றும். தண்டில் நீளவாக்கில் வெடிப்புகள் தோன்றும். வாழைத்தார் வெளிவராது, வந்தால் தாரில் காய்கள் சிறுத்து இருக்கும். மரத்தின் கிழங்கை தோண்டியெடுத்து குறுக்கில் வெட்டினால் கருஞ்சிவப்பு நிறத்தில் புள்ளிகள், கோடுகள் காணப்படும்.

தடுக்கும் முறை:ரஸ்தாளி, மொந்தன், விருப்பாச்சி, கற்பூரவள்ளி, நெய்ப்பூவன், நேந்திரன் இவற்றில் பாதுகாப்பு அதிகம். இதனை கட்டுப்படுத்த வாழை, நெல், கரும்பு பயிர் சுழற்சியை கடைப்பிடிக்க வேண்டும். நோய் தாக்காத தோட்டத்திலிருந்து கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும். கிழங்கின் மேல் திசுக்களை நீக்கிவிட்டு, சேற்றுக்குழம்பில் முக்கி எடுத்து பின் 10 கிராம் சூடோமோனாஸ் கலவையை தூவி, பின் நடவு செய்யவும். சூடோமோனாஸ் கலவையை ஏக்கருக்கு 1 கிலோ (ஏக்கருக்கு 2.5 கிலோ) அளவில் 20 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து நடவின் பொழுதும் நட்ட 2, 4, 6 மாதங்களிலும் மரத்தை சுற்றி இடவும். நோய்த்தாக்கப்பட்ட மரத்தினை வேருடன் பிடுங்கி அழித்துவிட்டு, பிடுங்கிய குழியில் 1-2 கிலோ சுண்ணாம்புத்தூள் இடவும்.இவ்வாறு வள்ளியூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் நரேஷ்பாபு தெரிவித்தார்.

**மக்காசோளப் பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்க கூட்டுப் பொறுப்புக்குழு துவக்கம்**

தூத்துக்குடி : மக்காசோளப் பயிரில் சாகுபடி பரப்பினை அதிகரித்து உற்பத்தி திறனை உயர்த்தும் நோக்கத்தோடு கூட்டுப் பொறுப்புக் குழு துவக்க விழா நபார்டு பாங்க் மூலம் பசுவந்தனை கிராமத்தில் நடந்தது.

விழாவில் தூத்துக்குடி வேளாண்மை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம் கலந்து கொண்டு கடந்த பத்து வருடங்களுக்கு முன் 3500 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட மக்காசோளப் பயிர் சென்ற ஆண்டில் 18700 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டது. இப்பயிரினை எல்லா பருவத்திலும் சாகுபடி செய்யலாம். பூச்சி நோய் தாக்குதல் இல்லாதது. குறைந்த சாகுபடி செலவில் விவசாயிகளுக்கு நல்ல வருவாயைத் தரக் கூடியது. இப்பயிரினை விவசாயிகள் அதிக பரப்பளவில் பயிரிட முன் வரவேண்டும். வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு பயிறு வகை, எண்ணெய் வித்து, பருத்தி பயிர்களுக்கு உயிர் உரம், நுண் உரம், விதைகள், பயிர்பாதுகாப்புக் கருவிகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. பல்வேறு காப்பீட்டுக் கட்டணத்தை விதைத்த ஒரு மாதத்திற்குள் விவசாயிகள் செலுத்த முன் வர வேண்டும் என்றார்.

விழாவில் தூத்துக்குடி நபார்டு பாங்கின் உதவி மேலாளர் நடராஜன் மக்காச் சோளப் பயிரில் சாகுபடி பரப்பினை உயர்த்தி உற்பத்தி திறனை அதிகரித்திட முதற்கட்டமாக இப்பயிரில் கூட்டுப் பொறுப்புக் குழு துவக்கப்படுகிறது. மக்காச் சோளப் பயிருக்கு மட்டுமல்லாது பயறுவகை, எண்ணெய்வித்து, பருத்தி போன்ற

அனைத்து பயிர்களுக்கும் அடுத்த கட்டமாக கூட்டுப்பொறுப்புக் குழு உருவாக்கப்பட உள்ளது. இக்குழுவின் மூலம் விவசாயிகள் எளிதாக பாங்கினை அணுகி பயிர்க்கடனைப் பெற்றுக் கொள்ளலாம். இதர இடு பொருட்களுடன் உற்பத்தி திறனை உயர்த்திட முன்வர வேண்டும். கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜவகர் மக்காச்சோள தானியத்தினைக் கொண்டு கார்ன்பிளாக்ஸ், சிரப், கால்நடைத் தீவனம் போன்ற மதிப்புக் கூட்டும் பொருட்கள் தயார் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூல் கோடி 5 மக்காச்சோள வீரிய ஒட்டு ரகம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பயிருக்கு இயற்கை உரங்கள், உயிர் உரங்கள், நுண் உரம் இவைகளைப் பரிந்துரைப்படி இட்டால் அதிக மகசூல் பெறலாம் என்றார். தூத்துக்குடி மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்க் தனி அலுவலர் செந்தமிழ் செல்வி விழாவில் கலந்து கொண்டு 2008-2009ம் ஆண்டில் 200 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் துவங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 250 குழுக்கள் துவங்கப்பட்டது. 2009-2010ம் ஆண்டில் 300 குழுக்கள் துவங்கப்பட்டது. இந்த ஆண்டில் 200 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் துவங்கிட அளிக்கப்பட்ட இலக்கத்தில் இதுவரை 40 குழுக்கள் துவங்கப்பட்டு உள்ளது. கூட்டுப் பொறுப்புக் குழுவில் உள்ள விவசாயிகள் பாங்க் கடன் பெற்று அதிக வருவாயை அடைந்திட மத்திய கூட்டுறவு பாங்க் அனைத்து உதவிகளையும் செய்து தர தயாராக உள்ளது என்றார்.பாண்டியன் கிராம பாங்க் மண்டல மேலாளர் தெய்வநாயகம் கலந்து கொண்டு விவசாயிகள் பாங்கிலிருந்து பெறப்படும் விவசாயக்கடனை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்திட வேண்டும். இதனால் பெற்ற கடனை உரிய காலத்திற்குள் விவசாயிகள் திரும்ப செலுத்த முடியும் என்றார்.விழாவிற்கு வருகை புரிந்தவர்களை நபார்டு உழவர் மன்றத்தலைவர் சண்முகமல்லுச்சாமி வரவேற்று மக்காச் சோளப் பயிர் சாகுபடி முறைகளை விவசாயிகளுக்கு பயிற்சி மூலம் கற்றுத்தர கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் முன்வர வேண்டும் என்றார்.குமரெட்டியாபுரம் பஞ்., தலைவர் மற்றும் நபார்டு உழவர் மன்றத்தலைவர் நவநீதக் கிருஷ்ணன் நன்றி கூறினார்

**காளான் உணவு பயிற்சி முகாம்**

ஜூலை 19,2010,00:00 IST

காரைக்கால் : காரைக்கால் மாத்துரில் வேளாண் அறிவியல் நிலையத்தில் பிரிவில் காளாண் உணவு தயாரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது.பயிற்சி முகாமில் காளா னின் சத்துக்கள், மருத்துவ குணங்கள், அதனைப் பயன் படுத்தி காளான் உணவு பொருட்களான சூப், காளான் பஜ்ஜி, காளான் ஊறுகாய், காளான் குருமா, களான் ரொட்டி உள்ளிட் டவை செய்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

ஜூலை 19,2010,00:00 IST

காரைக்கால் : காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் கால்நடை வளர்க்கும் விவ சாயிகளுக்கு கோடை காலத் தில் கறவை மாடுகளை பராமரிக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப் பட்டது.பயிற்சியினை வேளாண் அறிவியல் நிலைய முதல் வர் நடராஜன் தொடங்கி வைத்து

சிறப்புரையாற்றி னார். வேளாண் அறிவியல் கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் டாக்டர் கோபு கோடை காலத்தில் கறவை மாடுகளுக்கு ஏற்படும் தொல்லைகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறை களைப் பற்றி விவசாயி களுக்கு விளக்கி கூறினார்.கால்நடைகளுக்கு தேவையான கொட்டகை, தீவனம் மற்றும் தண்ணீர் முதலியவற்றின் முக்கியத் துவம் குறித்தும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். பயிற்சி முகாமில் விவ சாயிகள், வேளாண் அறி வியல் நிலைய அதிகாரி கள் பலர் கலந்து கொண்டனர்.

## *கேரளாவில் பச்சை தேயிலை விலை வீழ்ச்சி ஒரு கிலோ 5 ரூபாய்க்கு விற்பனை*

*கோழிக்கோடு, ஜூலை.19–*
*கேரளாவில் பச்சை தேயிலை விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. ஒரு கிலோ பச்சை தேயிலை 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.*

*தேயிலை விலை வீழ்ச்சி*

*கேரள மாநிலம், வயநாட்டில் 200–க்கும் மேற்பட்ட தேயிலை எஸ்டேட்டுக்கள் உள்ளன. இதில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். தற்போது தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் தேயிலை நன்கு செழித்து வளர்ந்து உள்ளது.*

*அதோடு தேயிலை செடிகள் நல்ல முறையில் கவாத்து செய்து இருப்பதால் நன்கு வளர்ச்சி பெற்று இருக்கிறது. அனைத்து எஸ்டேட்டுகளிலும் தேயிலை வரத்து அதிகரித்து உள்ளது. அதே நேரத்தில் மார்க்கெட்டில் பச்சை தேயிலை வாங்கும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டது. இதனால் ஒரு கிலோ பச்சை தேயிலையின் விலை 14 ரூபாய், 15 ரூபாயில் இருந்து தலைகீழாக இறங்கி 5 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.*

*விவசாயிகள் கவலை*

*சாதாரணமாக பச்சை தேயிலை வாங்குபவர்கள் அதை 5 நாட்கள் தான் பத்திரமாக வைத்து இருக்க முடியும். அதற்கு பிறகு அதை பயன்படுத்த முடியாது. தற்போது 5 ரூபாய்க்கு பச்சை தேயிலை விற்கப்படுவதால் தேயிலை விவசாயிகளுக்கு போதுமான வருமானம் கிடைப்பதில்லை.*

*தேயிலை பறிக்கும் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் சம்பளத்துக்கு கூட தேயிலை கிடைப்பதில்லை என்று விவசாயிகள் சிலர் கூறுகிறார்கள். அதே நேரத்தில் மார்க்கெட்டில் கேரள தேயிலை மவுசு என்பதால் தேயிலை பறிக்கும் தொழிலாளர்கள் தங்கள் பணியில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர். இந்த நிலையில் கோழிக்கோட்டில் தேயிலை மார்க்கெட் கூட்டுறவு அமைப்பை சேர்ந்த நிர்வாகிகள் சாஜூ, கே.தங்கச்சன், டி.சி.ஏ.சேவியர் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:–*

*தேயிலை தொழிற்சாலை அமைக்க வேண்டும்*

*கேரளாவில் வயநாடு மாவட்டம் தேயிலை நகரமாக விளங்குகிறது. இங்குள்ள*

எஸ்டேட்டுகளில் இருந்து பெறப்படும் தேயிலை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது தேயிலை வரத்து அதிகரித்து உள்ளதால் அதன் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது. வயநாடு தேயிலை விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து தப்ப வேண்டும் என்றால் இங்கு தேயிலை தொழிற்சாலை அமைக்க வேண்டும். அப்போது தான் பச்சை தேயிலை கொண்டு இங்கு தேயிலை தயாரிக்க முடியும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் நிதியுதவி அளித்து தேயிலை தொழிற்சாலை தொடங்க முன் வர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## எதிர் வரும் புதிய பருவத்தில் உள்நாட்டில் பருத்தி உற்பத்தி 3.15 கோடி பொதிகளாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டின் பருத்தி உற்பத்தி 3.15 கோடி பொதிகளாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது (ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டதாகும்).

பயிரிடும் பரப்பளவு

அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, நடப்பு பருவத்தில் இந்தியாவில், பருத்தி பயிரிடும் பரப்பளவு 10 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டு ஜூன் முதல் ஜூலை 2–ந் தேதி வரையில் பயிரிடும் பரப்பளவு 50 சதவீதம் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2009–ஆம் ஆண்டு கோடை கால விதைப்பு பருவம் வரையில் 1.01 கோடி ஹெக்டேரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. பருத்தி உற்பத்தியில் உலக அளவில் நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

தமிழ்நாட்டில்...

பருத்தி ஆலோசனை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், தமிழ்நாட்டில் 1.09 லட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது, 2009–10 பருவத்தில் 1.04 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்தது. 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 95,000 ஹெக்டேர் பரப்பளவில்தான் பருத்தி சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதுமாக பருத்தி சாகுபடி பரப்பளவு அதிகரித்து வரும் நிலையில், தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவு சரிவடைந்து வருவதாக தெரிகிறது.

நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய

*மாநிலங்களின் பங்களிப்பு, ஒட்டுமொத்த அளவில் 7 சதவீதமாக உள்ளது.*
*இந்திய ஜவுளி, பருத்தி துறைகள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. பருத்தி சாகுபடி, வர்த்தகம் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலுமாக இத்துறை சுமார் 5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. பருத்தியை மூலப்பொருளாகக் கொண்டு பல்வேறு தயாரிப்புகளை அளிப்பதில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.*
*இந்தியாவின் பங்களிப்பு*
*இந்திய ஜவுளித் துறையில் பருத்தி உற்பத்தி துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பருத்தி உற்பத்தி, பயன்பாடு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்ற அனைத்து பிரிவுகளிலும் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள் நேரடியாக ஜவுளி துறையை பாதிக்கிறது.*
*சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 17 சதவீதமாக உள்ளது. நம் நாட்டில் சராசரியாக ஒரு கோடி ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளி ரகங்களில் பருத்தியின் பங்களிப்பு சுமார் 45 சதவீதம் என்ற அளவில் உள்ளது.*

## குன்னூர் ஏல மையத்தில் 28 சதவீத தேயிலை தூள் தேக்கம்

*குன்னூர், ஜூலை.19–*
*குன்னூர் தேயிலை ஏலத்தில் 28 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*
*தேயிலை ஏலம்*
*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் விற்பனை எண் 28–க்கான ஏலம் கடந்த 15, 16 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.*
*ஏலத்திற்கு மொத்தம் 18 லட்சத்து 38 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 12 லட்சத்து 77 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 5 லட்சத்து 58 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது. தேயிலை விற்பனையை பொறுத்த வரை ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் நாட்டு வர்த்தகர்கள் குறைந்த அளவு தேயிலை தூளே வாங்கினர்.*
*28 சதவீதம் தேக்கம்*
*உள்நாட்டு வர்த்தகம் களை கட்டாமல் இருந்த போதிலும், உயர்விலை தேயிலை தூளுக்கு கிராக்கி இருந்தது. இதன் காரணமாக உயர்விலை தேயிலை தூளுக்கு 2 ரூபாய் விலை உயர்வு இருந்தது.சாதாரண வகை தேயிலை தூளுக்கு 3 ரூபாய் விலை குறைந்தது.*
*இந்த வாரமும் தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாததால் 28 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. சி.டி.சி. தேயிலையின் உயர்ந்த பட்ச விலையாக 184 ரூபாயும், ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை யாக 121 ரூபாயாக இருந்தது.*
*அடுத்த ஏலம்*
*தேயிலையின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகைக்கு 34 ரூபாய் 39 ரூபாய் வரையிலும், உயர் விலை தேயிலை தூள் 80 ரூபாய் 125 ரூபாய் வரையிலும் விலை இருந்தது. டஸ்ட் ரகத்தின் உயர் விலை தேயிலை தூள் 34 ரூபாயில் இருந்து 40 ரூபாய் வரையிலும், உயர்விலை தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து, 143 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.விற்பனை எண் 29–க்கான ஏலம் வருகிற 22, 23 ஆகிய*

*தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 17 லட்சத்து 83 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

## கொலக்கம்பை பகுதியில் பலத்த காற்று, மழையினால் மேரக்காய் மகசூல் பாதிப்பு

*கொலக்கம்பை, ஜூலை.19–*
*கொலக்கம்பை பகுதியில் மழையினாலும், வீசும் காற்றினாலும் மேரக்காய் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் போதுமான விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*
*காய்கறி விவசாயம்*
*கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர் மட்டம், டெராமியா, கெரடாலீஸ், சட்டன், கிளிஞ்சாடா, கரும்பாலம் உள்பட பல்வேறு இடங்களில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் மலைத்தோட்ட காய்கறிகள் விவசாயம் செய்யப்படு கிறது. இதில் விவசாயிகள் முட்டை கோஸ், உருளைக் கிழங்கு, கேரட், மேரக்காய் போன்றவற்றை பயிரிட்டுள்ள னர். தற்போது மேற்கண்ட கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் மேரக்காய் பயிரிட்டு இருக்கிறார்கள்.*
*விவசாயிகள் கவலை*
*இவற்றை அறுவடை செய்யும் விவசாயிகள் மேட்டுப்பாளையம் காய்கறி மண்டிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு, விற்பனை செய்து வருகிறார்கள். தற்போது அடிக்கும் காற்றின் காரணமாக மேரக்காய் மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும் குறைந்த விலையே கிடைப்பதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.*
*இது குறித்து மேரக்காய் விவசாயி ஒருவர் கூறியதாவது:–*
*கொலக்கம்பை பகுதிகளில் பந்தலிட்டு மேரக்காய் விவசாயம் செய்து வருகிறோம். மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை மேரக்காய் சீசன் காலமாகும். தற்போது மாவட்டத்தில் பெய்து வரும் மழையினாலும், வீசும் பலத்த காற்றினாலும் கொடிகளில் உள்ள மேரக்காய் பூக்கள் உதிர்ந்து விடுகின்றன.*
*குறைந்த விலை*
*மேலும் அதை தாண்டி வளரும் மேரக்காய்கள் போதுமான உருவம் கிடைப்பது இல்லை. இதனால் மேட்டுப்பாளையம் மண்டிக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படும் மேரக் காய்களுக்கு போது மான விலை கிடைக்கவில்லை. தற்போது ஒரு கிலோ மேரக்காய் ரூ.4 முதல் ரூ.8 வரை குறைந்த விலையே கிடைக்கிறது. கடந்த ஆண்டு இதே நேரத்தில் ஒரு கிலோ மேரக்காய் ரூ.24 வரை விலை கிடைத்தது. தற்போது மகசூல் குறைந்த போதிலும், போதுமான விலை கிடைப்பது இல்லை. இதனால் எங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.*
*இவ்வாறு அவர் கூறினார்.*



ஆடி மாத தொடங்கி உள்ளதால், கூடலூர் புத்தூர்வயல் பகுதியில் வயலில் ஏர்பூட்டி விவசாயிகள் உழுவதை படத்தில் காணலாம்.

## ஆடி மாத தொடக்கம்:

# நெல் விவசாயத்தில் கவனம் செலுத்தும் கூடலூர் விவசாயிகள்

கூடலூர், ஜூலை.19–

ஆடி மாத தொடங்கி விட்டதால் நெல் விவசாயத்தில் கூடலூர் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். இதனால் வயல்களில் உழுது நாற்றுக்கள் நடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

### பருவ மழை தொடர்ந்து தாமதம்

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகு திகளில் மலைப் பிரதேசங்களில் விளையக் கூடிய காய்கறிகள் விளை விக்கப்படுகின்றன. ஆனால் இதே மாவட்டத்தில் உள்ள கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதிகளில் மலைப்பிரதேச காய்கறிகளுடன், சமவெளி பிரதேச காய்கறிகளும் விளை விக்கப்படுகின்றன. கூடலூர் பகுதியில் காபி, ஏலக்காய், கிராம்பு, குறுமிளகு, இஞ்சி உள்ளிட்ட பணப் பயிர்களும் விளைகின்றன.

கூடலூர் பகுதி விவசாயிகள் காலநிலைகளுக்கு ஏற்ப வளரக்கூடிய பயிர்களை அதிகளவு பயிரிட்டு விவ சாயம் செய்வதில் முன்னோடி யாக விளங்குகின்றனர். குறிப் பாக ஆண்டு தொடக்கத் தில் பாகற்காய், மரவள்ளி கிழங்கு, பஜ்ஜி மிளகாய், முட்டை கோஸ், காலி பிளவர், பீன்ஸ், புடலங்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களை விளை வித்து அறுவடை செய்து விடுவது வாடிக்கை.

இதன்பிறகு ஜூன், ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை தொடங்கியதும் இஞ்சி, நெல் விவசாயத்தில் கூடலூர் விவசாயிகள் முனைப்போடு ஈடுபடுவர். ஆனால் இந்த ஆண்டு கூடலூர் பகுதியில் பருவமழை பெய்வதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது. இருப்பினும் நம்பிக்கையுடன் ஆயிரக்கணக்கான ஏக்கரில் இஞ்சி பயிரிட்டுள்ளனர்.

### ஆடி மாத தொடக்கம்: நெல் விவசாயத்தில் கவனம்

மேலும் ஜூன் மாதத்தில் கூடலூர் புத்தூர்வயல், மண்வயல், தொரப்பள்ளி, புளியாம்பாரா, பந்தலூர் பகுதியில் உள்ள விவசாயிகள் விதை நெல் நட்டனர். ஆடி மாதம் தொடங்கி விட்டதால் வயல்களில் மாடுகளை பூட்டி நிலத்தை உழவு செய்யும் பணியில் ஈடுபட்டு வரு கின்றனர். பெரும்பாலும் இங் குள்ள வயல்களில் மர நெல், பாரதி, கந்தகசால் ரக நெல் களை பயிரிட்டு வருகின்றனர். ஆனால் இந்த ஆண்டு ஆந்திர சம்பா, கல்யாணி ரக நெல்களையும் விவசாயிகள் பயிரிட்டுள்ள னர்.

ஆடி மாதத்தில் பருவமழை தீவிரம் அடையும் என்ற எதிர் பார்ப்பில் கூடலூர் விவசாயிகள் விதை நெல் நாற்றுக்களை வயல்களில் நடும் பணியில் ஈடுபட்டுள் ளனர்.

தொடர்ந்துமழைபெய்தால் மட்டுமே நெல் விவசாயம் களைகட்டும். இல்லை யெனில் பாசனத் திற்காக நீர் வரத்து இல்லாமல் நெல் விளைச்சல் பாதிக்கும் சூழ்நிலை நிலவுகிறது.



வயல்களில் நடுவதற்காக விதைக்கப்பட்டு நெல் நாற்றுக்கள் பச்சைபசேல் என வளர்ந்துள்ள காட்சி.